மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

2. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

10-30 மணி.

திரு. எம். அப்துல் லத்திப் ; தலைவர் அவர்களே, ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொதுப் பிரச்சினை பற்றி நான் நேற்றைய தினம் தங்களிடத்தில் அறிவிப்புக் கொடுத்தேன். இன்று எடுத்துக் கொள்வதாக தாங்கள் சொன்னீர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நானா சொன்னேன்? நான் சொல்லவில்லை.

திரு. எம். அப்துல் லத்திப் : சொன்னீர்கள், செயலாளரைக் கேளுங்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மேலும், ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுக்கிறபோது அதே நாளில் இன்னொன்றை எடுக்க முடியாது.

திரு. எம். அப்துல் லத்திப் ; நாளைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்லுங்கள். கொடுக்கவே இல்லை என்று சொன்னால் அது சரியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது குறித்து ஆய்வு செய்து தான் சொல்ல முடியும்.

4. வரவு-செலவுத் திட்டம் 1990-91, பொது விவாதம்--தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அடுத்து, இன்றைக்கு விவாதத்தில் அதிகம் பேர்கள் பங்கு பெற வேண்டுமென்று அனைத்துக் கட்சியினரும் விரும்பகிற காரணத்தாலும், காலையிலும், மாலையிலும் இந்த அவை தொடர்ந்து நடைபெறுவதாலும், எத்தனை பேருக்கு அதிக வாய்ப்புக் கொடுக்க முடியுமோ அத்தனை பேருக்குக் கொடுக்க வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டு உள்ளனர். ஒவ்வொருவருக்கும் சரியாக 10 மணித் துளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதை மீறினால் அடுத்த உறுப்பினர் அழைக்கப்படுவார் என்பதை மனதில்